வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 10.11.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பீகாரில், நாளை நடைபெற உள்ள 2-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தல் வாக்குப் பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், நாட்டின் முன்னணி பொருளாதார வல்லுனர்களுடன், பட்ஜெட்டிற்கு முந்தைய முதலாவது ஆலோசனை கூட்டம் நடத்தினார்.

பாரம்பரிய மருத்துவம் குறித்த உலக சுகாதார அமைப்பின் 3 நாள் உச்சி மாநாடு, புதுடெல்லியில் அடுத்த மாதம் 17 -ஆம் தேதி தொடங்க உள்ளது.

இளைஞர்கள், மற்றும், நலிவடைந்த பிரிவினரின் அதிகார மேம்பாட்டிற்கு, நகர்புற கூட்டுறவு வங்கிகள் முக்கியத் துவம் அளிக்க வேண்டும் என, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

*பீகார்*

பீகாரில் 20 மாவட்டங்களுக்கு உட்பட்ட 122 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள 2-ஆவது மற்றும் இறுதிகட்ட சட்டமன்றத் தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் அமைதியாகவும் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம், அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு ……….

பீகாரில் நாளை, 2-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தல் வாக்குப் பதிவு, காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது. ஆயினும் ஜாமூயி, ஜஜ்ஜா, கோவிந்தபூர் உட்பட 7 தொகுதிகளில்

பாதுகாப்பு காரணங்களை ஒட்டி, வாக்குப் பதிவு, மாலை 5 மணியுடன் முடித்துக் கொள்ளப்படும். இதுஅல்லாது, கயா, அவுரங்காபாத், வங்கா உள்ளிட்ட மாவட்டங்களில், குறிப்பிட்ட வாக்குச் சாவடிகளில் மட்டும், வாக்குப் பதிவை மாலை 5 மணியுடன் முடித்துக் கொள்ள தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. பீகாரில் 2-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கென மொத்தம் சுமார் 45 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 595 வாக்குச் சாவடிகளை முற்றிலும் பெண் ஊழியர்களைக் கொண்டும் 21 வாக்குச் சாவடிகளை, மாற்றுத் திறனாளி ஊழியர்களைக் கொண்டும் நிர்வகிக்க, தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. இதுஅல்லாது 316 வாக்குச் சாவடிகள், வாக்காளர்களுக்கான அனைத்து வசதிகளும் அடங்கிய முன்மாதிரி வாக்குச் சாவடிகளாக நிறுவப்பட்டுள்ளன. நாளைய 2-ஆம் கட்ட பீகார் சட்டமன்ற தேர்தலில் ஆயிரத்து 302 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலத்தை, 3.7 கோடி வாக்காளர்கள் தீர்மானிக்க உள்ளனர். பெரும்பாலான தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கும், மகா **கட்பந்தன்** கூட்டணி வேட்பாளர்களுக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

*மோடி-இரங்கல்*

ஐதராபாத்தில் இன்று காலமான, புகழ்பெற்ற தெலுங்கு **கவிஞர் மற்றும்** பாடலாசிரியர் **அந்தேஸ்ரீ** மறைவு குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். தெலங்கானா மக்களின் போராட்டங்கள் மற்றும் இலட்சியங்களுக்கு குரல் கொடுக்கும் வகையிலும் தெலங்கானாவின் ஆன்மாவை பிரதிபலிக்கும் வகையிலும் பல பாடல்களை எழுதி புகழ்பெற்ற, கவிஞர் அந்தேஸ்ரீ-யின் மறைவினால் நாட்டின் கலாச்சார சூழலில் ஆழமான வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் கூறி உள்ளார். **தெலுங்கானா தனி மாநில போராட்டத்தின்** போது, கவிஞர் அந்தேஸ்ரீ இயற்றிய **ஜெய ஜெயஹே தெலங்கானா** பாடல், கோடிக் கணக்கிலான மக்களின் முழக்கமாகவே திகழ்ந்ததும், அண்மையில் நடைபெற்ற **தெலுங்கானா உதய நாள் விழாவின்** போது, அம்மாநில அரசு, அவருக்கு, 1 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கி சிறப்பித்ததும் குறிப்பிடத் தக்கது.

*நிர்மலா சீதாராமன்*

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், நாட்டின் முன்னணி பொருளாதார வல்லுனர்களுடன், பட்ஜெட்டிற்கு முந்தைய முதலாவது ஆலோசனை கூட்டம் நடத்தினார். மத்திய நிதி அமைச்சகத்தின பொருளாதார விவகாரங்கள் துறை செயலர், மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இடம் பெற வேண்டிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து வேளாண் அறிஞர்கள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன், நிதி அமைச்சர் இதே போல மற்றொரு கூட்டம் நடத்தினார். வரவிருக்கும் நாட்களில் வேறுபல துறையினருடன் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டங்களை நிதியமைச்சர் நடத்த இருப்பதாகவும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*ராஜ்நாத்*

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில், அதிநவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள, **பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்கள் பவன்** கட்டிடத்தை திறந்து வைத்தார். பாதுகாப்பு உற்பத்தி சார்ந்த பொது துறை நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் புதுமையாக்க முயற்சிகளை தூண்டும் கேந்திரமாக இப்புதிய கட்டங்கள் செயல்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மாநாட்டு கூடங்கள், கண்காட்சி அறைகள், மற்றும், போர்க்கள காட்சிகளை மெய்நிகர் முறையில் மறு உருவாக்கம் செய்வதற்கான சிமுலேட்டர் வசதிகளும் இக்கட்டடத்தில் இடம் பெற்றுள்ளன. விழாவை ஒட்டி பாதுகாப்பு உற்பத்தி சார்ந்த 16 பொது துறை நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து மறு ஆய்வுக் கூட்டம் ஒன்றையும் திரு ராஜ்நாத் சிங் நடத்தினார். இந்நிறுவனங்களின் புதுப்பிக்க வல்ல எரிசக்தி முயற்சிகள் குறித்த அறிக்கை ஒன்றும், இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகள் பற்றிய கையேடு ஒன்றும் நிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்டன. பாதுகாப்பு துறை இணை

அமைச்சர் திரு சஞ்சய் சேத், பாதுகாப்பு உற்பத்தி துறை செயலர் திரு சஞ்சீவ் குமார் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*பாரம்பரிய மருத்துவம்*

பாரம்பரிய மருத்துவம் குறித்த உலக சுகாதார அமைப்பின் 2-ஆவது சர்வதேச உச்சி மாநாடு, புதுடெல்லி பாரத் மண்டபத்தில், அடுத்த மாதம் 17 முதல், 19-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. **அனைவருக்குமான உடல் நலம்** என்பது குறித்த, **நீடித்த வளர்ச்சி இலக்குகளை** எட்டுவதில், பாரம்பரிய மருத்துவம், மாற்று மருத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவ முறைகளின் பங்கை வலுப்படுத்துவது குறித்து, இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். உலகெங்கிலும் இருந்து நேரடியாகவும், மெய்நிகர் முறையிலும் சுமார் 7 ஆயிரம் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

*அமித் ஷா-கூட்டுறவு*

வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள இளைஞர்கள், மற்றும், நலிவடைந்த பிரிவினரின் அதிகார மேம்பாட்டிற்கு, நகர்புற கூட்டுறவு வங்கிகள் முக்கியத் துவம் அளிக்க வேண்டும் என, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், **நகர்ப்புற கூட்டுறவுக் கடன் வசதிகள்** பற்றிய, சர்வதேச மாநாட்டை அவர் தொடக்கி வைத்தார். இளைஞர்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் கடன் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்ப, நகர்புற கூட்டுறவு வங்கிகளின் நிதி கட்டமைப்பை மறுசீரமைக்கவும், 2 லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு நகரத்திலும் குறைந்த பட்சம் ஒரு கூட்டுறவு வங்கி இருப்பதை உறுதிப்படுத்தவும் தேவை இருப்பதாக அவர் கூறினார். கூட்டுறவு அமைப்புகளுடன் இளைஞர்களை ஒருங்கிணைக்கவே. **திரிபுவன் கூட்டுறவு பல்கலைக்கழகம்** நிறுவப் பட்டுள்ளதாகவும், **சஹாகார் டிஜி-பே** போன்ற செயலிகள் மூலம், சின்னஞ்சிறு நகர்புற கூட்டுறவு சங்கங்களும், **டிஜிட்டல் பணப் பரிமாற்ற முறைக்கு** மாற முடியும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார். சர்வதேச கூட்டுறவு கூட்டமைப்பின், உலக அளவிலான தர

வரிசை பட்டியலில் இந்தியாவின் அமுல் மற்றும் இஃப்கோ நிறுவனங்கள், முதல் 2 இடங்களைப் பிடித்து இருப்பதை அமைச்சர் சுட்டிக் காட்டிப் பாராட்டினார்.

*ஜிஎஸ்டி – லடாக்*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், லடாக்கில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் லடாக்கில், கைவினைக் கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு வியாபாரிகள் முக்கியமாக பலன் பெற்றுள்ளனர். பஷ்மினா சால்வை, நம்தா போர்வை மற்றும் இதர கைத்தறி ரகங்கள் மீதான ஜிஎஸ்டி 12-ல் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் பாரம்பரிய நெசவாளர்களின் உற்பத்தி செலவு குறைந்து மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது. ஆப்பிரிக்காட் போன்ற பழவகைகள் மீதான வரியும் குறைக்கப்பட்டுள்ளதால் ஆயிர கணக்கில் விவசாயக் குடும்பங்களும், மகளிர் சுயஉதவிக் குழுக்களும் உற்சாகம் அடைந்துள்ளன. இயற்கை வேளாண்மையும் ஊக்கம் பெற்றுள்ளது. 7 ஆயிரத்து 500 ரூபாய் வரை உள்ள ஓட்டல் அறை வாடகை மீதான வரியும் 12-ல் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், சுற்றுலா பருவதில் லடாக்கிற்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்படவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

*நீர் வளம்*

மழை நீரை அதிக அளவில் சேகரிக்கவும், கிராமப்புற வாழ்வாதாரத்தை வலுப்படுத்தவும் மக்கள் முக்கியத் துவம் அளிக்க வேண்டும் என மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் டாக்டர் பெம்மசாமி சந்திரசேகர் கூறி உள்ளார். இன்று ஆந்திரமாநிலம் குண்டூரில் நீர் ஆதாரங்கள் தொடர்பான வடிநிலப் பகுதி மேம்பாட்டு உற்சவத்தை அவர்

தொடக்கி வைத்துப் பேசினார். நீர்வளத்தை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம், நிலத்தடி நீர் மட்டத்தை 3 மீட்டர் வரை உயர்த்தி, உற்பத்தி திறனை 6 மடங்கு அதிகரிக்க முடியும் என்றும், இதனால் விவசாயிகள் ஆண்டுக்கு 2-3 போகம் சாகுபடி செய்ய ஏதுவாகும் என்றும் அவர் கூறினார். தேசிய பாதுகாப்பில், நீர்வளப் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத் துவம் இருப்பதை கருத்தில் கொண்டே, 2-ஆம் கட்ட வடிநிலப் பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கு மத்திய அரசு, 13 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக அவர் தெரிவித்தார். இவ்விழாவின் ஒரு பகுதியாக வெங்கலய்ய பாலம் பகுதியில், 21 ஏக்கர் பரப்பில், அமிர்த் சரோவர் குளம் அமைக்கப்பட்டு, பூந்தோட்டம், நடைபாதை மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு வசதிகளும் நிறுவப்பட்டுள்ளன.

*புதுச்சேரி-கண்காட்சி*

புதுச்சேரியில், முதலியார்பேட்டை அர்ஜுன சுப்புராய நாயக்கர் அரசு உயர்நிலைப் பள்ளியில் இன்று நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் 200-க்கும் மேற்பட்ட அறிவியல் படைப்புகளை மாணவர்கள் காட்சிப் படுத்தி இருந்தனர். பள்ளிக் கல்வித் துறையின் பெண்கல்வி துணை இயக்குநர் திரு ராமசந்திரன் கண்காட்சியைத் தொடக்கி வைத்து மாணவர்களின் படைப்புகளை பார்வையிட்டார். கண்காட்சியை ஒட்டி, பள்ளியின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த டைனோசார் உருவம் மாதிரி வாக்குச் சாவடி, மூலிகை தோட்டம் உள்ளிட்ட படைப்புகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும்- புதுச்சேரி காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம், நெல்லை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் தென்காசி-குமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 16-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, குமரி மாவட்டம் குழித் துறையில், 4 செண்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

ஹாக்கி

சிலி நாட்டின் **சான்டியாகோ** நகரில், வரும் 25 முதல், டிசம்பர் 13-ஆம் தேதி வரை நடைபெற உள்ள, **சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் மகளிர் ஜூனியர் ஹாக்கி உலக கோப்பை போட்டிகளுக்கான** 20 உறுப்பினர் இந்திய அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. **கேப்டன் ஜோதி சிங்** தலைமையிலான இந்த அணியில் 18 வீராங்கனைகளும், 2 மாற்று வீராங்கனைகளும் இடம் பெற்றுள்ளனர். அணியின் பயிற்சியாளராக முன்னாள் ஹாக்கி வீரர் **துஷார் கண்ட்கர்** அறிவிக்கப் பட்டுள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பீகாரில், நாளை நடைபெற உள்ள 2-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தல் வாக்குப் பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், நாட்டின் முன்னணி பொருளாதார வல்லுனர்களுடன், பட்ஜெட்டிற்கு முந்தைய முதலாவது ஆலோசனை கூட்டம் நடத்தினார்.

பாரம்பரிய மருத்துவம் குறித்த உலக சுகாதார அமைப்பின் 3 நாள் உச்சி மாநாடு, புதுடெல்லியில் அடுத்த மாதம் 17 -ஆம் தேதி தொடங்க உள்ளது.

இளைஞர்கள், மற்றும், நலிவடைந்த பிரிவினரின் அதிகார மேம்பாட்டிற்கு, நகர்புற கூட்டுறவு வங்கிகள் முக்கியத் துவம் அளிக்க வேண்டும் என, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------